**செய்தி வெளியீடு எண்: 557** **நாள்: 29.07.2020**

**<u>செய்தி வெளியீடு</u>**

தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975ன்கீழ் பதிவு செய்யப்படும் சங்கங்கள் ஆண்டுக்கு ஒரு முறை பொதுக்குழுக் கூட்டத்தை அவசியம் கூட்ட வேண்டும். சங்கத்தின் நிதியாண்டு முடிந்த நாளிலிருந்து 6 மாதங்களுக்குள் இப்பொதுக்குழு கூட்டப்பட வேண்டும். தற்போது covid 19 தொற்று பரவி வரும் நிலையில் பொதுக்குழு கூட்டம் மற்றும் சங்கத் தேர்தலை நடத்த இயலாத நிலை உள்ளதாக தெரிவித்து இணையதள வழி (Online) நடத்திட அனுமதி வழங்க கோரி சில சங்கங்களிடமிருந்து கோரிக்கை பெறப்பட்டு வருகிறது. தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம் 1975 பிரிவுகள் 2(j), 15(3) மற்றும் 26ன்படி பொது குழுக் கூட்டத்தில் சங்க உறுப்பினர்கள் நேரடியாக பங்கேற்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதனால் இணையதளம் (Online) மூலம் பொது குழுக் கூட்டம் மற்றும் தேர்தல் நடத்திட அனுமதி வழங்க இயலாது. ஆனாலும், covid 19 தொற்று பரவி வரும் நிலையை கருத்தில் கொண்டே செப்டம்பர் 2020க்குள் கூட்டப்படவேண்டிய பொதுக்குழுக் கூட்டத்திற்கான கால அவகாசம் டிசம்பர் 2020 வரை மூன்று மாதங்களுக்கு நீட்டித்து அரசாணை எண்.89 வணிகவரி மற்றும் பதிவுத்துறை நாள். 16.06.2020ன் மூலம் உத்திரவிடப்பட்டுள்ளது. இக்கால நீட்டிப்பினை சங்கங்கள் பயன்படுத்திக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது என பதிவுத்துறைத்தலைவர் திருமதி. பா.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப , தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**